பக்கங்கள்:-20

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | சித்திரை 01 | திங்கட்கிழமை | 14.04.2025 | அதிர்வு 252




# ஒரே நோக்கத்துக்காக சகலரும் ஒன்றுபடுவோம்

## சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி



"நாட்டுக்குத் தேவையான புதிய பொருளாதார, சமூக மற்றும் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான தேசிய திட்டத்தை வெற்றி பெறச் செய்வதற்காகவும், நாட்டையும் மக்களையும் வெற்றி பெறச் செய்வதற்காகவும் இந்தப் புத் தாண்டில் அனைவரும் மேலும் வலிமையுடனும் ஒற்றுமையுடனும் ஒரே நோக்கத்துக்காக ஒன்றுபடுவோம் என அனைவருக்கும் நான் அழைப்பு விடுக்கின்றேன்."

- இவ்வாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க விடுத்துள்ள சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். 07

## ============= வவுனியா மாவட்டத்தில் =============

# 1,500 சிங்களக் குடும்பங்களை குடியேற்றுவதற்கு அரசு திட்டம்

## முன்னாள் எம்.பி. கஜேந்திரன் குற்றச்சாட்டு



(கி.வசந்தன்)

"கீழ் மல்வத்து ஓயா திட்டத்தில் வவுனியா மாவட்டத்தில் 1,500 சிங்களக் குடும்பங்களைக் குடியேற்ற முயல்கின்றார்கள். இதை சுட்டிக்காட்ட முதுகெலும்பற்ற செல்வம் அடைக்கலநாதன் வரவு - செலவு திட்டத்தில் நன்மை இருப்பதாகக் கூறி அதை ஆதரித்துள்ளார். சர்வதேச சமூகத்தின் முன்னால் அவர் அரசைப் பாதுகாக்கின்றார்."

– இவ்வாறு சாடியுள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளர் அறிமுக நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் நடைபெற்றது. இதன்போதே அவர் 07




உள்ளூராட்சித் தேர்தலை நடத்தும் விடயத்தில் தேர்தல் ஆணையத்துக்கும் அதற்காக நீதிமன்றத்தில் முன்னிலையாக வேண்டிய சட்டமா அதிபர் தரப்புக்கும் இடையில் வேட்பு மனு நிராகரிப்புக்கு எதிரான மனுக்களைக் கையாளும் விவகாரம் தொடர்பில் முரண்பாடு இருந்து வருவதை என் பத்தியிலும், எமது முரசின் செய்திகளிலும் தொடர்ந்து வெளிப்படுத்தி வருகின்றோம்.

இன்று இந்தத் தேர்தல் தொடர்பில் தமிழர் தரப்பில் முக்கியமான ஒரு விடயத்தை சுட்டிக்காட்டலாம் என்று நினைக்கிறேன். அதனால் இன்று பத்தி சற்று நீண்டு விட்டது. மன்னிக்குக.

இந்தத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் நிராகரிப்பு விவகாரத்தில் சட்ட ரீதியில் இரண்டு விடயங்களே முக்கிய பிரச்சினைக்கு உள்ளானவையாக – சர்ச்சைக்குரியனவாக – இருக்கின்றன.

ஒன்று – இளம் வேட்பாளர்களின் வயதை நிரூபிக்கும் பிறப்புச் சான்றிதழின் பிரதி தொடர்பான சர்ச்சை. பிறப்புச் சான்றிதழின் போட்டோ பிரதியை சமாதான நீதிவான் 06

# பொலிஸ் கான்ஸ்டபிள் நீரில் மூழ்கி உயிரிழப்பு

நீராடச் சென்ற ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தெஹியத்தகண்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பரகஸ்வெவவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர், கிராந்துருகோட்டே பகுதியைச் சேர்ந்த அரச புலனாய்வு சேவை தலைமையகத்தில் பணியாற்றும் 29 வயதுடைய பொலிஸ் கான்ஸ்டபிள் ஆவார்.

இவர் தனது நண்பர்களுடன் நீந்திக் கொண்டிருந்த போது நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் தெஹியத்தகண்டிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணையை தெஹியத்த கண்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# களுத்துறை கடற்கரையில் பெண் ஒருவரின் சடலம் மீட்பு

களுத்துறை வடக்கு பொலிஸ் பிரிவில் உள்ள கெலிடோ கடற்கரையில் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று களுத்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண்ணின் அடையாளம் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இறந்தவர் 45 – 50 வயது மதிக்கத் தக்கவர் என்றும் பொலிஸார் கூறினர்.

மேலும், உயிரிழந்த பெண்ணுக்குச் சொந்தமானது எனச் சந்தேகிக்கப்படும் ஒரு கைப்பையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்








# வவுனியாவில் முன்னணியின் வேட்பாளர்கள் அறிமுக நிகழ்வு

(கி.வசந்தன்)

வவுனியாவில் பொங்கு தமிழ் நினைவுத் தூபியில் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வைத் தொடர்ந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளர்கள் அறிமுக நிகழ்வு நடைபெற்றது.

வவுனியா நகர சபை முன்றலில் அமைந்துளள பொங்கு தமிழ் நினைவுத் தூபியில் தீபம் ஏற்றி மலர் தூபி அஞ்சலி நிகழ்வு இடம்பெற்ற பின் வவுனியா நகர சபை மண்டபத்தில் நேற்று வேட்பாளர்கள் அறிமுக நிகழ்வு இடம்பெற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது தமிழ் மக்கள் பேரவையாக அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சைக்கிள் சின்னத்தில் போட்டியிடுகின்றது.

கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.தவபாலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான என்.ஸ்ரீகாந்தா, ஜனநாயகத் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதி நாவலன் மற்றும் வவுனியா மாநகர சபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, செட்டிகுளம் பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களின் வேட்பாளர்கள், கட்சி ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# புத்தாண்டு விடுமுறைக்கு யாழ்.வந்த மகளை அழைக்கச் சென்ற தந்தை விபத்தில் மரணம்!



பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மகள் புத்தாண்டு விடுமுறைக்காக யாழ்ப்பாணம் வந்த வேளை, அவரை அழைத்து வரச் சென்ற தந்தை விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

யாழ்.புன்னாலைக்கட்டுவான்வடக்குசந்திக்குஅருகில்நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

பலாலி கிழக்கைச் சேர்ந்த கந்தவனம் செல்வநாயகம் (வயது 62) என்பவரே உயிரிழந்துள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இருந்து புத்தாண்டு விடுமுறைக்காக யாழ்ப்பாணத்துக்கு பஸ்ஸில் வந்த வேளை, மகளை அழைத்து வருவதற்காக உயிரிழந்த நபர் நேற்று முன்தினம் அதிகாலையில் பலாலியில் உள்ள தனது வீட்டில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார்.

அப்போது மழை பெய்து கொண்டிருந்த நிலையில், பழுதடைந்து வீதியில் நிறுத்தப்பட்டிருந்த உழவு இயந்திரப் பெட்டியுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து தொடர்பாக உழவு இயந்திரத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகளைச் சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




சித்திரை
கோடைத்திருவிழா
2025


அனைவருக்கும்
இனிய சித்திரைப் புத்தாண்டு
நல்வாழ்த்துகள்
tamil one TV HD
Voice of Tamil Canadians

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உறுதிப்படுத்தி இருந்தால் அதனை ஏற்கலாம் என்று கருதி சில கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் அவற்றை இணைத்து, வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்ய, அந்த வேட்பு மனுக்களை சம்பந்தப்பட்ட மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்கள் நிராகரித்து விட்டார்கள்.

அடுத்தது – வேட்பாளர்களின் விவரங்களை சான்றுரைக்கும் சமாதான நீதிவானின் உறுதியுரை பற்றிய விவகாரம். இதிலும் பல கட்சிகளும் தரப்புக்களும் சிறு தவறுகள் விட்டமையால் பல வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

இந்த வேட்பு மனுக்கள் நிராகரிப்புக்கு எதிராக அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் இரண்டு நீதிமன்றங்களில் நிவாரணம் கேட்டு விண்ணப்பித்தன.

ஒன்று – உயர் நீதிமன்றம். மற்றது – மேன்முறையீட்டு நீதிமன்றம்.

உயர் நீதிமன்றத்தை நாடிய தரப்புகள் இரண்டு விதமான விண்ணப்பங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தன.

தங்கள் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமையை ஆட்சேபித்து சில தரப்புகள் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுக்களை தாக்கல் செய்தன. குறிப்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அதனைத்தான் செய்தது.

வேறு பல தரப்புகள் தங்கள் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமையை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் ரிட் மனுக்களைத் தாக்கல் செய்தன.

அதேசமயம் வேறு அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் ரிட் மனுக்களைத் தாக்கல் செய்தன.

இதுதான் ஆரம்ப நிலைமை.

இந்த இரண்டு நீதிமன்றங்களும் வழக்குகளை ஏற்று உத்தரவுகளை வழங்கின.

உயர்நீதிமன்றம் தன் முன்னால் தாக்கல் செய்யப்பட்ட தேர்தல் ஆட்சேபனை தொடர்பான ரிட் மனுக்களை முழுமையாக நிராகரித்தது. அந்த ரிட் மனுக்களை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில்தான் தாக்கல் செய்ய வேண்டும் என்பது உயர் நீதிமன்றத்தின் கருத்தாக அமைந்தது.

அதேசமயம் அடிப்படை உரிமை மீறல் மனுக்களை விசாரிக்கும் தனித்துவ அதிகாரம் உயர் நீதிமன்றத்திற்கு மட்டுமே உரியது என்பதால் அடிப்படை உரிமை மீறல் மனுக்களாகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை உயர் நீதிமன்றம் முழுமையாக விசாரித்தது. அந்த விசாரணையின் போது சம்பந்தப்பட்ட மனுதாரர்கள் தரப்பில் வேட்பு மனுத் தாக்கல் தொடர்பில் இழைக்கப்பட்ட அல்லது இழைக்கப்பட்டவை எனக் கூறப்பட்ட விடயங்களை அது விரிவாக ஆராய்ந்து தனது தீர்ப்பில் ஒரு முடிவை தெரிவித்து இருக்கின்றது.

பிறப்புச் சான்றிதழின் போட்டோப் பிரதியை சமாதான நீதிவான் சான்றுரைத்து உறுதி செய்திருப்பதை ஏற்க உயர் நீதிமன்றம் மறுத்துவிட்டது. அது தவறான ஒழுங்கு என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்து விட்டது.

அத்தோடு, வேட்பாளர்களின் வேட்பு மனுக்கள் தொடர்பாக சமாதான நீதிவான் வழங்க வேண்டிய சான்றுரைப்பில் எந்தத் தவறும் இல்லாமல் முழுமையாக அது சட்டத்தில் கூறப்பட்டவாறு இருக்க வேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் சுட்டிக்காட்டியது.

இந்த இரண்டின் அடிப்படையிலும் தன் முன்னால் தாக்கல் செய்யப்பட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் உட்பட ஆறு அடிப்படை உரிமை மீறல் மனுக்களையும் உயர் நீதிமன்றம் நிராகரித்தது.

அதே சமயம் உயர் நீதிமன்றத்தினால் பரிசீலிக்கப்படாமல் நிராகரிக்கப்பட்ட ரிட் மனுக்களுக்கு உரிய தரப்புகள் {ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி (சங்கு கூட்டணி), இலங்கை தமிழரசு போன்றவை} உடனடியாகப் புதிதாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனுக்களை தாக்கல் செய்தன.

இதற்கிடையில் மேன்முறையீட்டு நீதிமன்றம் தனக்கு முன்னால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுக்களை பரிசீலித்து, அவற்றில் பெரும்பாலானவை தொடர்பில் வேட்பு மனுக்களை ஏற்றுக்கொள்ளும்படி தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டது.

பிறப்புச் சான்றிதழின் போட்டோ பிரதி சமாதான நீதிவானினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தால் அதை ஏற்கும்படியும், வேட்பாளர்களைச் சான்றுரைக்கும் சமாதான நீதிவான்களின் பதிவுகளில் சில தவறுகள் இருந்தால், அவற்றைக் கவனத்தில் கொள்ளாமல் வேட்பு மனுக்களை ஏற்கும்படியும் மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது. சுமார் எண்பதுக்கும் அதிகமான இத்தகைய தரப்புகளின் வேட்பு மனுக்களை ஏற்கும்படி இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஆயினும், இந்த இரண்டு விடயங்களிலும் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு முரணாக – மாறாக – மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு வழங்கியிருக்கின்றது.

இந்தப் பின்புலத்தில்தான் தேர்தல் ஆணையம் தேர்தலை நீதியாகவும், சகல தரப்புக்கும் சமமான அணுகுமுறையிலும் நடத்த வேண்டிய தன் கடப்பாட்டை நிறைவு செய்வதற்காக இரண்டு விடயங்களில் நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயம் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஒன்று – உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு மாறாக, மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை, உயர் நீதிமன்றுக்கு எடுத்துச் சென்று, மேன்முறையீடு செய்து, சரியான இறுதி உத்தரவு ஒன்றை – எல்லோருக்கும் கிடைக்கக் கூடியதான ஒரு நடவடிக்கையை – அது செய்ய வேண்டும்

அடுத்தது – இதே காரணங்களுக்காக நிராகரிக்கப்பட்ட பல வேட்பு மனுக்களின் தரப்புகள் நீதிமன்றங்களுக்கு செல்லவில்லை. ஆகவே அவர்களின் வேட்பு மனுக்களையும் இதே அடிப்படையில் பரிசீலித்து, உரிய முடிவை எடுக்கும் வழிகாட்டலை உயர் நீதிமன்றத்தில் இருந்து பெறவேண்டிய கடப்பாடு தேர்தல் ஆணையத்துக்கு உண்டு. அப்போதுதான் இந்தத் தேர்தலை நீதியாகவும், நியாயமாகவும், சகல தரப்புகளுக்கும் சமனான நீதி கிடைக்கும் முறையிலும் தேர்தல் ஆணையம் நடத்தி முடித்ததாக இருக்கும்.

ஆனால், இப்போது, தேர்தல் ஆணையத்துக்கும் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கும் இடையில் கட்டவிழும் சட்ட இழுபறி நிலைப்பாடு, இந்த விடயங்களைத் தேர்தல் ஆணையம் உயர்நீதிமன்றின் கவனத்துக்கு எடுத்துச் சென்று திருத்தும் என்ற நம்பிக்கையைத் தரவில்லை. உயர் நீதிமன்றத்துக்கு அது போகும் என்று நம்ப இடமில்லை. ஏதோ ஒப்புக்குத் தேர்தலை நடத்தி முடித்து, சமாளித்து விடும் போக்குதான் தேர்தல் ஆணையத்தின் அணுகு முறையில் தென்படுகின்றது.

இந்த நிலையில்தான் தமிழர் தரப்பில் இரண்டு தலைவர்களின் முக்கிய கடப்பாட்டைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இத்தகைய தவறு இழைக்கப்படுவதற்கு எதிராக தமிழர் தரப்பில் இரண்டு கட்சிகளுக்கு – அவர்களின் தலைவர்களுக்கு – முக்கிய பொறுப்பு உண்டு என்று நான் நினைக்கிறேன்.

ஒன்று – இலங்கைத் தமிழரசுக் கட்சி, அதன் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன்.

அடுத்தது – தமிழ் தேசிய மக்கள் முன்னணி, அத்தரப்பின் பதிவு செய்யப்பட்ட கட்சியான அகில இலங்கை தமிழ் காங்கிரசின் பொதுச் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம். இவரும் ஒரு சட்டத்தரணி.

இந்த இரண்டு பேரில் யாரேனும் ஒருவர் இவ்விடயத்தில் நீதி வேண்டி உயர் நீதிமன்றத்திடம் போனால் ஓர் அமர்விலேயே நீதி நிலைநாட்டப்படுவதற்கான உத்தரவை பெற முடியும் என்று நான் நினைக்கிறேன்.

ஏனென்றால் மேன்முறையீட்டு நீதிமன்றம் மேற்படி வேட்பு மனுக்களை ஏற்றுக்கொள்ளச் சொல்லி வழங்கிய பல வழக்குகளில் இவர்கள் இருவரும் எதிர்மனுதாரர்கள்தாம்.

எதிர்மனுதாரர்களுக்கு அறிவிக்காமல் – நோட்டீஸ் உத்தரவு கொடுக்காமல் – மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால உத்தரவு வழங்குவது சட்டப்படி சரியாக இருக்கலாம். ஆனால் இறுதித் தீர்ப்பை எதிர்மனுதாரர்களுக்கு நோட்டீஸ் அனுப்பாமலேயே நீதிமன்றம் வழங்க முடியாது. அது மிகப்பெரிய சட்ட தவறு. இப்போது நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்களை ஏற்றுக்கொள்ளச் சொல்லி மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கியிருப்பது அதன் இறுதித் தீர்ப்பு. இடைக்கால உத்தரவு அல்ல. எதிர்மனுதாரர்களான தமிழரசுக் கட்சி மற்றும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் ஆகிய தரப்புகளுக்கு நோட்டீஸ் அனுப்பாமலேயே தன் பாட்டில் இத்தகைய பல வழக்குகளில் மேன்முறையீட்டு நீதிமன்றம் தனது இறுதித் தீர்ப்பை வழங்கி இருக்கின்றது என்ற விவகாரத்தை இந்த இருவரில் ஒருவர் உயர்நீதிமன்றுக்கு எடுத்துச் சென்றால் உடனடியாகவே மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராகத் தடை உத்தரவைப் பெற முடியும்.

அப்படியானால் இவர்களில் யார் உயர்நீதிமன்றுக்கு விடயத்தை எடுத்துச் செல்வது பொருத்தமானது என்ற கேள்வி எழுகின்றது.

இலங்கைத் தமிழரசு கட்சியின் ஒரு வேட்பு மனு நிராகரிக்கப்பட்டமையை (மன்னார் மாவட்டம் மாந்தை மேற்கு பிரதேச சபைக்கான வேட்புமனு நிராகரிக்கப்பட்டமையை) ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு நிராகரிக்கப்பட்டதை அடுத்து, விரைந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தை அணுகிய தமிழரசு கட்சி, அதன் மூலம் தன்னுடைய வேட்பு மனுவை ஏற்றுக் கொள்ளச் செய்யும் உத்தரவை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பெற்றுக் கொண்டுவிட்டது. ஆகவே அதை நிராகரிக்கச் செய்யும் அடிப்படையிலான ஒரு வழக்குக்கு தமிழரசு கட்சியோ அதன் பொதுச்செயலாளர் சுமந்திரனோ செல்வது சாத்தியமற்றது. பொருத்தமற்றது.

ஆனால் கஜேந்திரகுமாரின் நிலைமை அத்தகையது அல்ல. அவரது தரப்பின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டமையை ஆட்சேபித்து அவர் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுக்களைத் தாக்கல் செய்தமையால், அந்த மனுக்களை முழுமையாக விசாரித்து, அவற்றில் உள்ள விடயங்களை ஆராய்ந்து, அதன் அடிப்படையில் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்து விட்டது. அதனால் அதற்குப் பின்னர் அவர் அந்த விடயத்துக்காக மேன்முறையீட்டு நீதிமன்றுக்குச் செல்ல முடியவில்லை.

ஆயினும், அவரது தரப்பு இழைத்த அதே தவறுகளை இழைத்தமை காரணமாக நிராகரிக்கப்பட்ட பிற வேட்புமனுக்களுக்கு உரியவர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனுத் தாக்கல் செய்து தங்கள் வேட்பு மனுக்களை தேர்தலுக்கு இணைப்பதற்கான நீதிமன்ற

07

## இரகசியம் பரகசியம்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

உத்தரவைப் பெற்றுவிட்டனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைப் பொறுத்தவரை – அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸைப் பொறுத்தவரை – உதாரணத்திற்கு நல்லூர் பிரதேச சபையை எடுத்துக் கொள்ளலாம். அங்கு அதன் வேட்புமனு என்ன காரணத்துக்காக நிராகரிக்கப்பட்டதோ, அதே போன்ற ஒரு காரணத்துக்காகவே சங்கு கட்சியின் வேட்பு மனுவும் நிராகரிக்கப்பட்டது. ஆனால் சங்கு கட்சி நிவாரணம் பெற்றுவிட்டது. வேட்பு மனுவைத் தேர்தலில் சேர்த்துக் கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் மூலம் அது உத்தரவு பெற்றுவிட்டது.

உயர்நீதிமன்ற தீர்ப்பின் காரணமாகத் தமிழ் தேசிய மக்கள் முன்னணி நிராகரிக்கப்பட்ட தன்னுடைய வேட்பு மனுக்களை சேர்த்துக் கொள்ள முடியாமல் போய்விட்டது.

ஆகவே, தனக்கு வழங்கப்பட மறுத்த நீதியின் அடிப்படையில், இந்த விவகாரத்தை இப்போதைய நிலையில் உயர் நீதிமன்றுக்கு எடுத்துச் சென்று, நீதியை நிலை நாட்டச் செய்ய வேண்டிய கடப்பாடு – பொறுப்பு – தார்மீக ரீதியாக கஜேந்திரகுமாரின் தரப்பில் விழுந்து இருப்பதாக நான் நினைக்கிறேன்.

அவர் ஒரு சட்டத்தரணி. அவர் பக்கத்தில் பல சட்டத்தரணிகள் இருக்கிறார்கள். என்ன செய்யப் போகிறார்கள் கஜேந்திரகுமார் தரப்பினர்? பொறுத்திருந்து பார்த்திருப்போம்!

---

## 1, 500 சிங்களக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“2009ஆம் ஆண்டு கொடூரமான முறையில் எமது விடுதலைப் போராட்டத்தை அரசு அடக்கியபோது, அடுத்து 50 வருடங்களுக்குத் தமிழ் மக்கள் தமது இருப்பைப் பற்றி சிந்திக்கக்கூடாது என்று கருதியே கொடூரமாக செயற்பட்டது.

ஒற்றையாட்சிக்குள் தமிழ் மக்களுக்குத் தீர்வு இல்லை என்பது தெட்டத்தெளிவானது.

நாங்கள் தோற்றுப் போனாலும் ஒரு கொள்கையோடுநின்றுதோற்றுப்போனார்கள் என வரலாறு பதியட்டும் என்றுதான் கடந்த காலங்களில் இருந்து செயற்பட்டு வருகின்றோம்.

தமிழ்த் தேசிய பேரவை உதயமானதை நினைத்து மகிழ்ச்சியடைகின்றோம். மரணித்த மாவீரர்களின் தியாகங்களுக்கு வலிமை இருக்கின்றது என்று உணர்கின்றேன். அடிமையாக வாழக் கூடாது என்பதற்காக நாம் எப்படிச் செயற்பட வேண்டும் என்றுதான் பாடங்களைப் படிக்க வேண்டும். நாங்கள் பொறுப்பற்ற முடிவுகளை எடுத்திருக்கவில்லை.

மக்களுடைய இருப்பு சார்ந்தே ஒவ்வொரு முடிவையும் எடுத்துள்ளோம். அழிவின் விளிம்பில் இருக்கின்ற வவுனியா மாவட்டத்தைப் பாதுகாப்பதற்காக யுத்தம் முடிந்து 15 வருடங்களுக்குப் பின்பும் இளைஞர்கள் உயிர் கொடுக்கும் வகையில் போராடிக் கொண்டிருக்கின்றார்கள்.

வெடுக்குநாறி மலையில்பௌத்த விகாரையை நிறுவி அதனை பௌத்தமயமாக்க முயன்றபோது மக்கள் திரண்டு அதற்கு எதிராகப் போராடியிருக்கின்றார்கள். நீதிமன்றங்களில் வழக்குகள் நடைபெற்றாலும் மக்கள் போராட்டங்களே அந்த ஆக்கிரமிப்பைத் தடுத்துள்ளது. இந்த இளைஞர்களைக் கட்டுப்படுத்த தொல்பொருள் திணைக்களமும், பொலிஸாரும் இணைந்து செயற்பட்டனர். வவுனியா சிறைச்சாலைக்குள் மிருகங்கள்கூட வாழ முடியாது. அவ்வாறான சிறைச்சாலைக்குள் எமது இளைஞர்கள் அடைக்கப்பட்டார்கள். இதன்மூலம் அவர்களை முடக்க நடவடிக்கை எடுத்தார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் தமிழினமாக ஒன்றுபட்டுப் போராடி அவர்களுக்கு விடுதலை கிடைத்தது.

அவர்கள் போராடி இருக்கவில்லையென்றால் குருந்தூர் மலை போன்று வெடுக்குநாறியில் புத்தர் கோயில் இருந்திருக்கும். 2009ஆம் ஆண்டுக்குப்பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தமிழ் மக்களின் தலைமை சக்தி தாம்பாளத்தில் வைத்து கொடுக்கப்பட்டது.

2009 வரை விடுதலைப்புலிகள் ஆக்கிரமிப்பைத் தடுத்தார்கள். 2009 இற்குப் பின்னர் 2013ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ அரசால் கொக்கச்சான்குளம் பகுதியில் சிங்களக் குடியேற்றம் உருவாக்கப்பட்டு 2015 இல் நல்லாட்சி காலத்தில் வவுனியா சைவப்பிரகாசக் கல்லூரியில் வைத்து உறுதிகள் வழங்கப்பட்டன. அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சுமந்திரனும், செல்வம் அடைக்கலநாதனும், மைத்திரிபால சிறிசேனவுடன் சேர்ந்து சிங்களக் குடும்பங்களுக்கு உறுதிகளை வழங்கினார்கள்.

அது, இன்று வவுனியா வடக்கு பிரதேச சபையில் 5 சிங்களப் பிரதிநிதிகள் வருவதற்கான வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது. சிங்களப் பேரினவாதம் மட்டும் எங்களின் அழிவுக்குக் காரணமாக இருக்கவில்லை. காலம் காலமாக சிங்களப் பேரினவாதிகள் எங்களது தரப்பில் இருந்து விலைபோகக்கூடிய, சலுகைகளுக்கு அடிபணியக் கூடியவர்களைப் பக்கத்தில் வைத்துக் கொண்டுதான் அனைத்து காரியங்களையும் ஒப்பேற்றியுள்ளார்கள். இந்த நிலைமை தடுக்கப்பட வேண்டுமாக இருந்தால் எங்களது அணி வெற்றி பெற வேண்டும்.

கீழ் மல்லவத்து ஓயா திட்டத்தில் வவுனியா மாவட்டத்தில் 1,500 சிங்களக் குடும்பங்களைக் குடியேற்ற முயல்கின்றார்கள். தந்திரிமலைப் பகுதியில் நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு 1,500 குடும்பங்களுக்குக் காணிகள் வழங்க ஏற்பாடுகள் நடக்கின்றன. இந்தத் திட்டத்தால் உண்மையில் அங்கு, 15 முஸ்லிம் குடும்பங்கள் நிலங்களை இழந்தன. ஆனால், தண்ணீர் திட்டம் எனற பெயரில் சர்வதேச நிதியில் எமது பிரதேசத்தில் சிங்கள குடியேற்றத்தை கொணடுவர முயல்கின்றார்கள். இதை சுட்டிக்காட்ட முதுகெலும்பற்ற செல்வம் அடைக்கலநாதன் வரவு – செலவுத் திட்டத்தில் நன்மை இருப்பதாகக்கூறி அதை ஆதரித்துள்ளார். ஏனென்றால் சர்வதேச சமூகத்தின் முன்பாக அவர் அரசைப் பாதுகாக்கின்றார்.

அநுரகுமார திஸநாயக்க இனவாதத்தின் மொத்த வடிவம். முதலிருந்த அரசுகள் நேரடியாக யுத்தக் குற்றங்களில் சம்மந்தப்பட்டார்கள். ஆனால், அநுர அந்த அரசுகளுக்கு ஆதரவு தெரிவித்து, இராணுவத்துக்கு ஆட்களைத் திரட்டிக் கொடுத்தார். இவர்கள் புதிவர்கள் என்ற மாயைத் தோற்றம் கட்டியெழுப்பப்படுகின்றது. அதை வைத்து தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்று தமிழ் இனப்படுகொலையை மறைத்து இங்கு அபிவிருத்திதான் பிரச்சினை என்று எமது மக்களையே வைத்துச் சொல்ல வைக்கும் செயற்பாடு நடக்கின்றது.

ஆகவே, எம்மை நாம் ஆளும் நிலை உருவாக வேண்டும். பேரினவாதக் கட்சிகள் விரட்டியடிக்கப்பட வேண்டும். அவர்களின் முகவர்கள் விரட்டியடிக்கப்பட வேண்டும்.” – என்றார்.

## ஒரே நோக்கத்துக்காக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவரின் வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

“பௌதீக மற்றும் ஆன்மீக ரீதியாக புதிதாகும் எதிர்பார்ப்புகளை அடையாளப்படுத்தும், சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டை, நாடு என்ற வகையில் பல வெற்றிகளை அடைந்துகொண்டு, சிறந்த மற்றும் புதியதொரு தேசத்தை உருவாக்கும் கனவுக்காக இடைவிடாமல் போராடும் வேளையில் நாம் கொண்டாடுகின்றோம்.

வீழ்ச்சியடைந்திருந்த நமது நாட்டை கடந்த சில மாதங்களாக மீண்டும் கட்டியெழுப்பி, பொருளாதார, சமூக, அரசியல் ரீதியாக புதிய நிலைக்கு உயர்த்தி வைத்துள்ளோம். அந்த வெற்றிகள் அனைத்தும் இந்நாட்டு மக்களுக்கே உரித்தாகும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் மக்கள் எம் மீது வைத்த நம்பிக்கையே நாட்டில் மாற்றம் ஏற்படுவதற்கு வழிவகுத்தது என்பதையும் வலியுறுத்த வேண்டும்.

சவால்களுக்கு மத்தியில் சரிந்துவிடாமல் நாட்டுக்காக நமது பொறுப்பை மேலும் வலுவாக நிறைவேற்றும் துணிச்சல் எமக்கு உள்ளது. மேலும் பூகோள அரசியலைப் போன்றே தேசிய ரீதியாக நாட்டின் முன்பிருக்கும் அனைத்து விதமான சவால்களையும் எதிர்கொள்ளத் தேவையான திட்டங்களை அரசு தற்போது செயற்படுத்தி வருகின்றது.

மனிதர்களுக்கும் இயற்கைக்கும் இடையிலான பௌதீக மற்றும் ஆன்மீகத் தொடர்புகளின் தனித்துவம் புத்தாண்டு மரபுகளினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவை சிங்கள மற்றும் தமிழ் இனங்களுக்கு இடையில் காணப்பட்ட வரலாற்று பிணைப்பு மற்றும் சகவாழ்வின் உயிர்ப்புள்ள சான்றாக விளங்குகின்றன.

இன்றைய சமூகம் பல்வேறு பிரிவுகளால் வேறுபட்டிருந்தாலும், புத்தாண்டு போன்ற கொண்டாட்டங்கள் அத்தகைய பிரிவுகளைக் கலைந்து சமூகத்துக்குள் மீண்டும் ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வைப் பாதுகாப்பதற்காகவே உருவாக்கப்பட்டுள்ளன.

சகவாழ்வை ஊக்குவித்து மற்றவர்கள் மீது கருணை காட்டும் ஒழுக்கத்தின் இருப்பை எமக்குள் எற்படுத்திக்கொள்வதே இந்தப் புத்தாண்டில் நமது பொறுப்பாகும்.

மேலும், மக்கள் வாழ்வைப் புதுப்பித்துக் கொள்ளவும் பிற்போக்கான மனப்பாங்கு மற்றும் சிந்தனை அற்ற புதிய மனிதனை உருவாக்குவதுமே சூரிய பெயர்ச்சியுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் அனைத்து சம்பிரதாயங்களினதும் பொதுவான எதிர்பார்ப்பாகும். இவ்வாறு நாம் புதிதாவதால் மாத்திரமே புத்தாண்டு நமது வாழ்விற்கு புதிய ஆரம்பத்தை தரும்.

நாட்டுக்குத் தேவையான புதிய பொருளாதார, சமூகமற்றும்அரசியல்மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான தேசிய திட்டத்தை வெற்றி பெறச் செய்வதற்காகவும், நாட்டையும் மக்களையும் வெற்றி பெறச் செய்வதற்காகவும் இந்தப் புத்தாண்டில் அனைவரும் மேலும் வலிமையுடனும் ஒற்றுமையுடனும் ஒரே நோக்கத்துக்காக ஒன்றுபடுவோம் என அனைவருக்கும் நான் அழைப்பு விடுக்கின்றேன்.

உங்கள் அனைவருக்கும் ”வளமான நாடு – அழகான வாழ்க்கை” நோக்கிய பயணத்தின் எதிர்பார்ப்புக்களை ஒளிரெச் செய்யும் செழிப்பான புத்தாண்டாக அமையட்டும்!” – என்றுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பிள்ளையார் கல்யாணம்

இலங்கையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குவது என்பதும், பிள்ளையார் கல்யாணம் என்பதும் ஒன்றுதான் போலும். பிள்ளையார் கல்யாணம் நாளை, நாளை என்று தள்ளிப் போவது போல, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கும் நடவடிக்கையும் பல பத்தாண்டுகளாகத் தொடர்ந்து இழுபடுகின்றது. இப்போது திரும்பவும் அந்தச் சட்டத்தை ரத்து செய்து, மாற்றீடு ஏற்பாடுகளைக் கொண்டு வருவது குறித்து ஆராய்வதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டிருப்பதாக நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி சட்டத்தரணியும் முன்னாள் சொலிஸிட்டர் ஜெனரலுமான ரியன்ஸி அரசகுலரத்ன தலைமையிலான இந்தக் குழு மே மாதத்தில் பொது ஆலோசனைகளைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது விடயத்தில் சிவில் சமூக அமைப்புகளிடமிருந்து உள்ளீடுகளையும், சர்வதேச நிறுவனங்கள் மற்றும் சமூகங்களிடமிருந்து கருத்துக்களையும் பெறுவதும் இந்தக் குழுவிற்குப் பணிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டச் சீர்திருத்தங்களைக் கொண்டுவருவதில் கடந்த கால அரசாங்கங்கள் உரிய விடாமுயற்சியுடன் செயல்படவில்லை என்றும், இப்போது நியமிக்கப்பட்ட குழுவிற்கு குறுகிய காலத்திற்குள் சட்டத்தை ரத்து செய்வதற்கான நடவடிக்கைகளை உறுதியான முறையில் அடையாளம் காண அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் நீதி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் அது போன்ற இயக்கங்களைத் தடை செய்வதற்கான தற்காலிக ஏற்பாடுகள் சட்டம் என்ற வடிவத்தில்தான் 1978 ஆம் ஆண்டில் இந்தச் சட்டம் முதல் முதலாகக் கொண்டுவரப்பட்டது. பின்னர் அடுத்த ஆண்டில், 1979 ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க சட்டமாக - பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டமாக - இது மாற்றப்பட்டது. அந்தச் சட்டத்தில் கூட அது தற்காலிக ஏற்பாடாக மூன்று வருடங்களுக்கு மட்டுமே என்ற சரத்து இடம்பெற்றிருந்தது. ஆயினும் 1982 இல் ஒரு சட்ட திருத்தத்தின் மூலம் அந்த மூன்று வருடங்களுக்கு என்ற அந்தக் கட்டுப்பாடு நீக்கப்பட்டது. அதிலிருந்து கடந்த நான்கரை தசாப்தங்களுக்கு மேல் 'தற்காலிக ஏற்பாடுகள் சட்டம்' என்ற பெயரில் நிரந்தரமாக இந்தக் கொடூரச் சட்டம் நீடிக்கின்றது.

2018 இல் அப்போதைய நல்லாட்சி அரசினால் இந்தச் சட்டத்தை ரத்து செய்து, அதற்கு மாற்றாக 'பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்' என்ற பெயரில் ஒரு சட்டமூலம் கொண்டுவரப்பட்டதாயினும் அது நிறைவேற்றப்படவில்லை.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்தில் - 2022 முற்பகுதியில் - இந்தச் சட்டமூலத்தில் சில திருத்தங்கள் செய்யப்பட்டன.

பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் காலத்தில் - 2023 இறுதியில் - இந்தச் சட்டத்தை மாற்றீடு செய்வதற்காக 'பயங்கரவாதத் தடைச் சட்டமூலம்' என்ற பெயரில் ஒன்று முன்வைக்கப்பட்டது. ஆயினும் அதுவும் நிறைவேற்றப்படவில்லை.

ஆக, காலத்துக்குக் காலம் இந்தப் பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தை ரத்து செய்ய அல்லது மாற்றீடு செய்ய பல முயற்சிகள் எடுக்கப்பட்டாலும், 'நித்திய கண்டம் பூரண ஆயுசு' என்பது போல இந்தச் சட்டம் மூலம் தொடர்ந்தும் 47 ஆண்டுகளாக நீடிக்கின்றது.

அந்த வரிசையில் இன்னொரு முயற்சி இப்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. அவ்வளவுதான்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. வரிச் சலுகையை இலங்கை நீடித்து பெறுவது - தக்க வைத்திருப்பது - இன்றைய அதனுடைய நெருக்கடியான பொருளாதார சூழலில் அத்தியாவசியமானது. அந்த வரிச்சலுகை நீடிப்பை பெறுவதாயின் இந்தச் சட்டத்தை ரத்து செய்து அல்லது மாற்றீடு செய்து ஐரோப்பிய ஒன்றியத்தைத் திருப்திப்படுத்த வேண்டிய கட்டாயம் - நெருக்குவாரம் - இலங்கைக்கு உண்டு. அதனால் இந்த தடவையாவது இந்த காட்டுமிராண்டிச் சட்டம் தூக்கிக் கடாசப்படும் என்று நம்புவோமாக...!

# ஓடும் ரயிலில் ஏறி காலை இழந்த வயோதிபர்

ஓடும் ரயிலில் ஏற முயன்ற வயோதிபர் ஒருவர் தவறி வீழ்ந்து படுகாயமடைந்த சம்பவம் நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் மட்டக்களப்பு மாவட்ட எல்லைப் பகுதி யான ரிதிதென்னை ரயில் நிலையத்தில இடம்பெற்றுள் ளது.

கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்ற ரயில் ரிதிதென்னை நிலையத்தில் நிறுத்தி விட்டு மீண்டும் செல்லும்போது வயோதிபர் ஒருவர் ஏற முற்பட்டபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், காயமடைந்த 60 வயதுடைய நபர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் வயோதிபரின் இடது கால் சத்திர சிகிச்சையின் பின்னர் அகற்றப்பட்டுள்ளது.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்ற னர்.

# ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் 20ஆம் திகதிக்குப் பின்னரே வெளியாகும்




2024ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் எதிர்வரும் 20ஆம் திகதிக்குப் பின்னர் வெளி யிடப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள் ளது.

20ஆம் திகதிக்கு முன்னர் பெறுபேறுகளை வெளி யிடத் திணைக்களம் முன்னர் திட்டமிட்டிருந்தது. எனினும், அதனை நடைமுறைப்படுத்துவதில் எழுந்த சிக்கல்களை தொடர்ந்தே பெறுபேறுகளை வெளியிடுவது தாமதமாகி யுள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் – டிசம்பரில் நடந்த உயர்தரப் பரீட் சைக்கு 3 இலட்சத்து 31 ஆயிரத்து 185 மாணவர்கள் தோற்றியி ருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஏப்ரல் 23 இற்குப் பின்னரே ரணிலை விசாரணைக்கு அழைக்கத் தீர்மானம்




முன்னாள் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவை எதிர் வரும் 23ஆம் திகதிக்குப் பின்னர் விசாரணைக்கு அழைக்க இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு முடிவு செய் துள்ளது.

சாமர சம்பத் தசநாயக்க ஊவா மாகாண முதலமைச்சராகப் பணியாற்றிய காலத்தில் வங்கியிலிருந்து பணம் விடுவிக்கப் பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக வாக்குமூலம் பெறுவதற்காக முன்னாள் ஜனாதிபதி அழைக்கப்படவுள்ளார் என்று இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வாக்குமூலம் பெறுவதற் காக எதிர்வரும் 17 ஆம் திகதி இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு ஆணைக்குழு ரணில் விக்ரமசிங்கவுக்கு அறிவித்திருந்தது.

இது தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்குக் கடிதம் எழுதி, புத்தாண்டு தினத்தன்று தானும் தனது வழக்கறிஞர்களும் கொழும் பிலிருந்து வெளியே செல்வதால் வருகை தர முடியாது என்பதால் முன்னிலையாவதற்கு வசதியாக வேறொரு திகதியைத் தருமாறு கேட்டிருந்தார்.

இதற்கமையவே எதிர்வரும் 23ஆம் திகதிக்குப் பிறகு ஒரு திகதி நிர்ணயிக்க ஆணையம் முடிவு செய்துள்ளது என்று அறியவருகின்றது.












# அவல நிலையைச் சந்திக்கவுள்ள வடக்கு மாகாணக் கல்வித்துறை

## சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் 150ஆவது ஆண்டு நிகழ்வில் ஆளுநர் வேதநாயகன் கவலையுடன் தெரிவிப்பு

“முன்னைய காலங்களில் இந்தியாவிலிருந்து ஆசிரியர்கள் இங்கு வந்து கற்பித்ததாகக் கேள்விப்பட்டிருக்கின்றேன். எதிர்காலத்திலும் அவ்வாறானதொரு நிலைமைதான் வரப்போகின்றதோ என்று பல அதிபர்கள் எனக்குச் சொல்கின்றார்கள். சில பாடங்களுக்கு எங்களுக்கு ஆசிரியர்கள் இல்லாமல் போகப்போகின்றது. மாணவர்களை இப்போதே சரியான துறைகளைத் தெரிவு செய்வதற்குரிய வழிகாட்டல்களை வழங்காவிடின் பாரதூரமான விளைவுகளை நாம் சந்திக்க வேண்டியிருக்கும்.”

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் 150ஆவது ஆண்டு நிகழ்வுகளின் மூன்றாம் நாளின் காலை அமர்வில் – சாதனையாளர் கௌரவிப்பில், வடக்கு மாகாண ஆளுநர் பிரதம விருந்தினராகவும், வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சின் செயலர் ம.பற்றிக் டிறஞ்சன் சிறப்பு விருந்தினராகவும், தென்மராட்சி கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி அபிராமி இராஜதுரை கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

கல்லூரி முதல்வர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், விருந்தினர்கள் பாண்ட் அணிவகுப்பு மரியாதையுடன் அழைத்துச் செல்லப்பட்டனர். தேசியக் கொடி, கல்லூரிக்கொடி, 150ஆவது ஆண்டு நிறைவுக் கொடி என்பன ஏற்றப்பட்ட பின்னர் மேடை நிகழ்வுகள் ஆரம்பமாகின.

ஆளுநர் தனது பிரதம விருந்தினர் உரையில்,

“நான் சிறுவனாக படித்துக்கொண்டிருந்தபோது உங்கள் பாடசாலையின் ஹொக்கி அணி பிரபலமாக இருந்தது எனக்கு இப்போதும் நினைவிருக்கின்றது. உங்கள் பாடசாலை நீண்ட பாரம்பரியத்தைக் கொண்டிருக்கின்றது. அர்ப்பணிப்பான அதிபர்களால்தான் இடப்பெயர்வுகள் உள்ளிட்ட பல சவால்களைச் சந்தித்தாலும் பாடசாலை தலைநிமிர்ந்து நிற்கின்றது.

வடக்கு மாகாணத்தில் பல பாடசாலைகள் மூடப்படும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. மாணவர்கள் அனுமதி குறைவடைந்து செல்கின்றது. எமது சனத்தொகை முன்னரைவிட பல மடங்கு வேகத்தில் வீழ்ச்சியடைந்துள்ளது. பிறப்பு வீதம் குறைகின்றது. இதற்கும் அப்பால் வெளிநாட்டு மோகம் எம்மவரிடையே இன்றும் இருக்கின்றது. இவை எல்லாம் இணைந்து எமது மாகாணப் பாடசாலைகளின் மாணவர் அனுமதியில் தாக்கத்தைச் செலுத்துகின்றன.

எங்கள் பிள்ளைகளுக்கு எவ்வாறான துறைகளைத் தெரிவு செய்யவேண்டும் என்ற போதுமான வழிகாட்டல்கள் வழங்கப்படவேண்டும். விஞ்ஞான, கணித துறைகளைத் தெரிவு செய்யும் மாணவர்களின் எண்ணிக்கையும் குறைந்து செல்கின்றது. அவ்வாறு விஞ்ஞான மற்றும் கணிதத் துறைகளைத் தெரிவு செய்தாலும் அவர்கள் மருத்துவர்கள் அல்லது பொறியியலாளர்கள் என்ற நிலையைத்தான் தெரிவு செய்கின்றார்களே ஒழிய அதற்கு அடுத்த நிலையிலுள்ள துறைகளைத் தெரிவு செய்யவில்லை. இதனால் எமது மாகாணத்தில் இருக்கின்ற துணை மருத்துவ வெற்றிடங்கள் உள்ளிட்ட பலவற்றை நிரப்புவதற்கு வேறு மாகாணங்களிலிருந்து ஆட்களைப் பெற்றுக் கொள்ள வேண்டியிருக்கின்றது.

புதிதாகநியமனம்பெற்ற இளம்அதிபர்கள் பலரும் அவர்கள் பொறுப்பேற்ற பாடசாலைகளில் சொல்லிக்கொள்ளத்தக்களவு மாற்றங்களை உருவாக்கி வருவதாக கல்வி அமைச்சின் செயலர் எனக்கு கூறியிருந்தார். அதனை வரவேற்கின்றேன். அதிபர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டால், சிறந்த தலைமைத்துவத்தை பாடசாலைக்கு வழங்கினால் முன்னேற்றத்தை நாம் கண்ணூடாகக் காணலாம்.

எங்களுடைய சமூகத்தில் வழிகாட்டிகளாக இருந்தவர்களின் பாதைகளை நாங்கள் பின்பற்றத் தவறுவதனால்தான் இன்றைய இளைய சமுதாயம் பிறழ்வான பாதையை நோக்கிச் செல்கின்றது. மாணவர்கள் கூடுதலாக பாடசாலையை விட்டு இடைவிலகும் சூழலும் ஏற்படுகின்றது. இதைச் சீர் செய்யத் தவறினால் நாம் எதிர்கால சந்ததிக்குச் செய்யும் துரோகமாகும். இதை மாற்றும் பொறுப்பு எல்லோருக்கும் இருக்கின்றது.

மாணவர்களுக்கு இலக்கு இருக்கவேண்டும். கல்வியில் எதைச் சாதிக்கப் போகின்றோம் என்ற தூர நோக்கு இருக்கவேண்டும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக மாணவர்களை கல்வியில் வளப்படுத்துவதுடன் மாத்திரமல்லாது தலைமைத்துவத்தையும் வளர்த்துவிடவேண்டும்.” – என்றார் ஆளுநர்.

இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் ஆகியோருக்கான கௌரவிப்பையும் ஆளுநர் வழங்கிவைத்தார்.








# நல்லூர் வடக்கு சந்திரசேகர பிள்ளையார் ஆலய மஞ்சம்



நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திர சேகரப் பிள்ளையார் ஆலய மஞ்சத் திருவிழா கடந்த வியா ழக்கிழமை இரவு இடம்பெற்றது. (படங்கள் – ஐ. சிவசாந்தன்)







# 16 சிறுவர்கள் மீது துஷ்பிரயோகம்: விளையாட்டுப் பயிற்றுநர் கைது!

## கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சியில் 16 சிறுவர்களைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ள விளையாட்டுப் பயிற்றுநர் நேற்று ஞாயிற்றுக்கிழமை பகல் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த சில நாட்களாகத் தலைமறைவாக இருந்து வந்து மேற்படி நபர் தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைவாக விரைந்து செயற்பட்ட கிளிநொச்சி குற்றத் தடுப்புப் பொலிஸார் சந்தேகநபரை கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியில் வைத்து கைது செய்துள்ளனர்.

மேற்படி சந்தேகநபர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டு வருகின்றார்.

மேலதிக சட்ட நடவடிக்கைக்காக அவர் நீதிமன்றத்தில் முற்படுத்தப் படவுள்ளார்.

# வக்பு சட்டத்துக்கு எதிராக வன்முறை; மேற்கு வங்கத்தில் 150 பேர் கைது!



வக்பு சட்டத்துக்கு எதிரான போராட்டத்தில் வன்முறை ஏற்பட்டத்தைத் தொடர்ந்து மேற்கு வங்கத்தின் வடக்கு மாவட்டமான முர்ஷிதாபாத்தில் பதற்றம் நிலவி வருகிறது. இந்த வன்முறையில் 3 பேர் உயிரிழந்துள்ளனர், 150 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியா முழுவதும் உள்ள வக்பு சொத்துக்களை நிர்வகிக்க முக்கிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு நாடாளுமன்றத்தில் வக்பு திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்தினை எதிர்த்து இந்தியா முழுவதும் ஏற்பட்ட போராட்டங்களில் மேற்கு வங்கத்தின் முர்ஷிதாபாத் நகரும் ஒன்று. அங்கு கடந்த வெள்ளிக்கிழமை தொழுகைக்கு பின்பு நடந்த வக்பு சட்டத்துக்கு எதிரான போராட்டம் வன்முறையாக மாறியது. மாவட்டத்தில் சுதி, துலியன், சம்சர்கஞ்ச் மற்றும் ஜங்கிபூர் பகுதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டன.

தற்போது நிலைமை கட்டுப்பாட்டில் உள்ளதாகவும், மக்கள் அதிகமாக கூடுவதைத் தடுக்க தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக மாநில பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதனிடையே, அமைதியை நிலைநாட்ட மத்திய படைகளை நிலைநிறுத்துமாறு கொல்கத்தா உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. உயர்நீதிமன்றம் கடந்த சனிக்கிழமை கூறும் போது, "நிலைமை மிகவும் மோசமாகவும், நிலையற்றதாகவும் உள்ளது. மக்களின் பாதுகாப்பு ஆபத்தில் இருக்கும் போது, அரசியலமைப்பு நீதிமன்றங்கள் மவுன பார்வையாளராக இருக்க முடியாது" என்று தெரிவித்திருந்தது.

இதனிடையே, அனைத்து பிரிவு மக்களும் அமைதி காக்க வேண்டும் என்று மாநில முதல்வர் மம்தா பானர்ஜி வேண்டுகோள் விடுத்துள்ளார். மேலும் வன்முறையில் ஈடுபடுபவர்கள் சமூகத்துக்கு தீங்கு விளைவிக்கிறார்கள் என்று தெரிவித்தார். சர்ச்சைக்குரிய சட்டத்தைக் கொண்டுவந்து மாநில அரசு இல்லை, மத்திய அரசுதான் என்று தெரிவித்த மம்தா, இந்தச் சட்டத்தை மாநில அரசு ஆதரிக்கவில்லை என்றும் அச்சட்டம் மாநிலத்தில் அமல்படுத்தப்படாது என்றும் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், மேற்குவங்கத்தின் எதிர்க்கட்சித் தலைவரான பா.ஜ.கவின் சுவேந்து அதிகாரி சுமார் 400 இந்துக்கள் தங்களின் வீடுகளை விட்டு வெளியேறும் நிலைக்கு நிர்பந்திக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளார். அவர் கூறுகையில், "மேற்குவங்கத்தில் மதத் துன்புறுத்தல் நடப்பது உண்மையானது. திரிணமூல் காங்கிரஸின் திருப்தி படுத்தும் அரசியல் தீவிரவாத சக்திகளுக்கு தைரியத்தை தந்துள்ளது. இந்துக்கள் வேட்டையாடப்படுகிறார்கள். நமது மக்கள் தங்களின் சொந்த நிலத்தில் உயிருக்கு பயந்து ஓடுகிறார்கள்" என்று தெரிவித்துள்ளார்.

மாநில ஆளுநர் சி.வி. ஆனந்த் போஸ் மாநிலத்தின் தற்போதைய கலவரம் குறித்து கவலை தெரிவித்துள்ளார். மேலும் உயர்நீதிமன்றத்தின் உத்தரவினை வரவேற்றுள்ளார். அவர் கூறுகையில், "சரியான நேரத்தில் தலையீட்டு சரியான முடிவினை உயர் நீதிமன்றம் வழங்கியுள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

# ஆந்திராவில் பட்டாசு தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் 8 பேர் உயிரிழப்பு





இந்தியாவின் ஆந்திர மாநிலத்தில் உள்ள பட்டாசு தொழிற்சாலையில் இடம்பெற்ற வெடி விபத்தில் 8 பேர் உயிரிழந்துள்ளனர் என இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த விபத்து சம்பவத்தில் 7 பேர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்கள் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த விபத்து தொடர்பிலான விசாரணைகளை அந்நாட்டு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மீண்டும் காலணி அணிந்தார் அண்ணாமலை

நயினார் நாகேந்திரன் வேண்டுகோளை ஏற்று மீண்டும் அண்ணாமலை காலணி அணிந்துள்ளார்.

கடந்த 2024 டிசம்பரில், அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை தொடர்பான முதல் தகவல் அறிக்கை பொது வெளியில் வெளியானது.

அப்போது, கோவையில் டிசம்பர் 26 திகதி செய்தியாளர்களை சந்தித்த அண்ணாமலை, "தி.மு.க. ஆட்சியை அகற்றும் வரை காலணி அணிய மாட்டேன்" என்று சபதம் எடுத்துக்கொண்டார்.



இந்நிலையில், தமிழக பா.ஜ.க. தலைவராக நேற்று முன்தினம் பொறுப்பேற்ற நயினார் நாகேந்திரன் விழா மேடையில், "தி.மு.க. ஆட்சியை அகற்றும் வரை காலணி அணிய மாட்டேன் என்று அண்ணாமலைசபதம் ஏற்றார். ஆட்சி மாற்றத்துக்காக அமித் ஷா நேற்றே அடிக்கல் நாட்டிவிட்டார். அதனால், அண்ணாமலை மீண்டும் காலணி அணிந்துகொள்ள வேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்து, புதிதாக வாங்கி வந்த காலணியை அண்ணாமலையிடம் கொடுத்தார்.

"வயதில் மூத்தவரான பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் விடுத்த வேண்டுகோளை ஏற்றுக் கொள்கிறேன்" என்று கூறி அண்ணாமலை, காலணியை அணிந்து கொண்டார்.






# அமெரிக்காவில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர் வெளியேறுங்கள்

## 30 நாள்கள் காலக்கெடு விதித்தார் ட்ரம்ப்

அமெரிக்காவில் 30 நாள்களுக்கு மேல் தங்கியிருக்கும் வெளிநாட்டினர் அரசாங்கத்தில் பதிவு செய்ய வேண்டும், இதற்கு இணங்க மறுத்தால் அபராதமும் சிறைதண்டனையும் விதிக்கப்படும் என்று ட்ரம்ப் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்பு துறை அதன் எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

“அமெரிக்காவில் 30 நாள்களுக்கு மேல் தங்கியிருக்கும் வெளிநாட்டினர், உடனடியாக அமெரிக்க அரசில் தங்களை பதிவு செய்துகொள்ளவேண்டும். இதனை ஏற்கத் தவறுவது சிறை தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும் குற்றமாகும்.

ஜனாதிபதி ட்ரம்ப் அரசு நிர்வாகமும், உள்நாட்டு பாதுகாப்புத்துறை செயலாளர் க்ரிஷி நோம் ஆகியோர் வெளிநாட்டினருக்கு தெளிவான செய்தியை தெரிவிக்கின்றனர். இப்போதே நீங்களாகவே உங்களை நாடு கடத்திக் கொள்ளுங்கள் என்பதே அது.” என்று தெரிவித்துள்ளது.

மேலும் சட்டவிரோதமாக தங்கி இருப்பவர்களுக்கான செய்தி என்று, சுயமாக நாட்டை விட்டு வெளியேறுவதன் நன்மை மற்றும் பின்விளைவுகள் பட்டியலிடப்பட்டுள்ளன. அதன் படி, சுயமாக வெளியேறுவது மிகவும் பாதுகாப்பானது. நீங்கள் செல்லவிருக்கும் விமானத்தை உங்களின் விருப்பப்படி தேர்வு செய்யலாம். நீங்கள் குற்றமற்ற சட்ட விரோதமில்லாமல் சுயமாக வெளியேறினால் அமெரிக்காவில் சம்பாதித்த பணத்தை உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.

நீங்களாகவே சுயமாக வெளியேறும் போது எதிர்காலத்தில் சட்டப்பூர்வமாக அமெரிக்காவுக்கும் வரும் வாய்ப்பைப் பெறலாம். ஒருவேளை அவ்வாறு வெளியேற முடியாதவர்கள், சலுகை விலையில் விமானப்பயணத்துக்கான வாய்ப்பினைப் பொறலாம் என்று தெரிவித்துள்ளது.

அதேபோல் வெளியேறாதவர்கள் சந்திக்க இருக்கும் விளைவுகளும் பட்டியலிடப்பட்டுள்ளன. சுயமாக வெளியேறாதவர்களை உள்நாட்டு பாதுகாப்புத்துறை அடையாளம் கண்டவுடன் அவர்கள் நாடுகடத்தல் நடவடிக்கையை எதிர்கொள்ள வேண்டி இருக்கும்.

நீங்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்கான இறுதி உத்தரவை பெற்ற பின்பு நாளொன்றுக்கு 998 அமெரிக்க டொலர் அபராதம் விதிக்கப்படும். நீங்கள் வெளியேறுவதாகக் கூறிவிட்டு அதைச் செய்யத்தவறினால், 1000 முதல் 5000 டொலர்கள் அபராதம் விதிக்கப்படும்.

சுயமாக நீங்கள் நாட்டைவிட்டு வெளியேறாவிட்டால் சிறைதண்டனைக்கு ஆளாகலாம். அதேபோல் தங்களைப் பதிவு செய்யாதவர்கள், சட்டப்பூர்வ குடியேற்ற முறைப்படி அமெரிக்காவுக்கு மீண்டும் வர தடைவிதிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முடிவுகள் அமெரிக்க ஹெச் 1 பி மற்றும் மாணவர் அனுமதி விசா வைத்திருப்பவர்களை நேரடியாக பாதிக்காது, என்றாலும் முறையான அனுமதி இல்லாமல் அமெரிக்காவில் வெளிநாட்டினர் தங்குவதை தடுக்க சட்டப்பூர்வமான எச்சரிக்கையை வழங்குகிறது.

ஹெச் 1 பி விசா வைத்திருப்பவர்கள் வேலை இழந்திருந்தாலும் குறிப்பிட்ட காலத்துக்குள் அமெரிக்காவை விட்டு வெளியேறத்தவறினால் சட்டப்பூர்வ நடவடிக்கையைச் சந்திக்க வேண்டி இருக்கும். எனவே ஹெச் 1 பி மற்றும் மாணவர் விசா வைத்திப்பவர்கள் அமெரிக்காவில் தங்கியிருப்பதற்கான காரணத்தையும் அதற்கான தேவையையும் தெரிவித்திருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விண்வெளியில் பெண்கள் குழு



பெண்களை மாத்திரம் கொண்ட குழுவொன்று விண்வெளிக்கான தனது பயணத்தை இன்று முன்னெடுக்கவுள்ளது.

06 பேர் கொண்ட இந்த குழுவை ஜெஃப் பெசோஸால் நிறுவப்பட்ட விண்வெளி நிறுவனமான ப்ளூ ஒரிஜின், அதன் நியூ ஷெப்பர்ட் ரொக்கெட்டில் விண்வெளிக்கு அனுப்பவுள்ளதாக அறிவித்தது.

1963 ஆம் ஆண்டில் சோவியத் விண்வெளி வீராங்கனையான வோலன்டினா தெரெஸ்கோவ் தனியாக விண்வெளிக்குச் சென்று வந்த பின்னர் பெண்கள் மாத்திரம் விண்வெளிக்கு செல்வது இதுவே முதல்தடவையாகும்.

இந்த குழுவில் பொப் பாடகியான கேட்டி பெர்ரி, செய்தியாளர் கேல் கிங், சிவில் உரிமைகள் சட்டத்தரணி அமாண்டா நுயென், நாசாவின் முன்னாள் ரொக்கெட் விஞ்ஞானி ஆயிஷா போவே, திரைப்பட தயாரிப்பாளர் கேரியன் ஃப்ளின் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இவர்களுடன் ஆறாவது பெண்ணாக இந்தக் குழுவை வழிநடத்துபவரும் ஜெஃப் பெசோஸின் காதலியுமான லோரன் சான்செஸ் பயணிக்கவுள்ளார்.

இவர்கள் பூமிக்கும் விண்வெளிக்கும் இடையே பூமியின் வளிமண்டலத்திற்கு அப்பால் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒரு கற்பனை எல்லைக்கோடான கார்மன் கோட்டைக் கடந்து செல்வார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பயணம் சுமார் 11 நிமிடங்கள் மாத்திரமே நீடிக்கும் என்பதுடன் விண்வெளியில் இருந்து பூமியின் அழகிய காட்சியைக் கண்டுகளித்த பின்னர் அவர்கள் மீண்டும் பூமியை நோக்கிய பயணத்தை ஆரம்பிப்பார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்வெளி சுற்றுலாவை ஊக்குவிப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கம் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# சித்திரைப் புத்தாண்டு சிறப்பிதழ்

# அதிகாலையில் பிறக்கும் 'விசுவாவசு' வருஷம்!



வித்தகர் விபுலமாமணி
வி.ரி.சகாதேவராஜா

மற்றுமொரு புதுவருடம் இன்று 14 ஆம் திகதி அதிகாலையில் பிறந்துள்ளது.

தமிழர் ஆண்டில் பிரபவ எனும் வருடத்தில் தொடங்கி அட்சய எனும் வருடம் வரை 60 வருட கால சுழற்சியில் 'விசுவாவசு' வருடம் என்பது 39 ஆவது வருடமாக திகழ்கிறது.

'விசுவாவசு' என்றால் நேர்மையான பண்பாளர், தயாள சிந்தனையாளர், செல்வந்தர் என்று பொருள்.

நிகழும் மங்கலகரமான குரோதி வருஷம் நிறைவுற்று இப்புதிய 'விசுவாவசு' வருஷமானது பங்குனி மாதம் 30 ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை பின்னிரவு (2025.04.14) 02 மணி 29 நிமிடமளவில் பிறந்துள்ளது. அதாவது ஆங்கில திகதி 14.04.2025 சரியாக திங்கட்கிழமை அதிகாலை 2.29 மணிக்கு இந்தப் புதிய வருடம் பிறந்துள்ளது.

இத்தினத்தில் அனைவரும் சங்கற்பித்து மருத்து நீர்தேய்த்து ஸ்நானம் பண்ணி புத்தாடையணிந்து சிவசின்னங்களை தரித்து தீபம், நிறைகுடம், கண்ணாடி, பசு போன்ற மங்கலப் பொருள்களில் முக தரிசனம் செய்து ஆலய வழிபாடாற்றி பெற்றோர், குரு ஆகிய பெரியோர்களின் நல்லாசி பெற்று அறுசுவை உண்டிகளுண்டு இன ஜன பந்துக்களுடன் அளவளாவி மங்கல கரமாக வாழ வேண்டும்.

இவ்வருட அதிஷ்ட தெய்வம்: சுப்பிரமணியன் (மலை மீது அமைந்துள்ள முருகன்).

அதிஷ்ட தேவதை: வாராஹி.

அதிஷ்ட மூலிகை: சுக்கு, திப்பிலி.

அதிஷ்ட கல்: புஷ்பராகம்.



கார்ய சித்தி மந்திரம்: உத்திஷ்ட கணபதி மந்திரம்.

அதிஷ்ட ஹோமம்: கணபதி ஹோமம்.

இவ்வருட ஆட்சி சித்தர்: கோரக்கர்.

கைவிஷேடம்: இன்று (2025.04.14) திங்கள்கிழமை காலை 9.10 – 11.45 மணி வரை.

புத்தாண்டு விஷேட பூஜை செய்யும் நேரம்: 2025 .04.14 ஆம் திகதி அதிகாலை 2.30 மணி.

சங்கிரம தோஷ நட்ஷத்திரங்கள்: திருவாதிரை, சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்கள் தவறாது மருத்து நீர் தேய்த்து வருஷப் பிறப்புக் கருமங்களை முறையாக தெய்வ வழிபாடாற்றி இயன்றளவு தான தருமங்கள் செய்து சக்கிரம தோஷத்தை நிவர்த்தி செய்து கொள்ளுங்கள்.

இடைக்காடரால் பாடப்பட்ட "60 வருட வெண்பா" எனும் பாடலிலே 'விசுவாவசு' வருடத்துக்குரிய பாடல் இது.

"விசுவாவசு வருஷம் வேளாண்மை யேறும்
பசு மாடு மாடும் பலிக்குஞ் – சிகநாசம்
மற்றையரோ வாழ்வார்கள் மாதங்கண் மீறுமே
யுற்றுலகி னல்லமழை யுண்டு" என்பதாகும்.

# சித்திரைப் புத்தாண்டு சிறப்பிதழ்

## அனைவர் வாழ்விலும் இன்பமுண்டாகட்டும்!



சமய நெறியானது ஒவ்வொரு சமயத்தினரையும் வழிப்படுத்துவதாக, நெறிப்படுத்துவதாக அமைந்துள்ளது. தமிழ் வருடங்கள் 60 இல் 39 ஆவது வருடமாக 'விசுவாவசு' எனும் நல் நாமத்துடன் பிறக்கின்றது. வருட ஆரம்பநாளில் அனைவரும் அமைதியான முறையில் இறை பிரார்த்தனையுடன், பெரியோர் முன்னோர் வணக்கத்துடன் தினசரி விடயங்களை ஆரம்பித்து தொடர்வது வழமை. சமயங்கள் வாழ்வியலை போதித்து நிற்கிறது. நாம் ஒவ்வொருவரும் சமயநெறி காட்டிய ஒழுங்கில் வாழ முயற்சி செய்து அவ்வாறே வாழ வேண்டும்.

எமது சைவத்தமிழ் மக்கள் அனைவரது வாழ்விலும் வளமும் நலமும் பலமும் பெற்று இன்ப கரமாக வாழ்க என அன்பே உருவான பரம்பொருளின் பாதம் பணிந்து பிரார்த்தனை செய்து மனமார்ந்த நிறைந்த நல் வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் இந்துக் குருமார் அமைப்பின் சார்பில் பகிர்ந்து மகிழ்ச்சி அடைகிறோம்.

**சிவாகம கலாநிதி சிவஸ்ரீ**
**கு.வை. க. வைத்தீஸ்வர குருக்கள்,**
**(தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.**
**சிவஸ்ரீ ச. சாந்தரூப குருக்கள்.**
**செயலாளர், இந்துக் குருமார் அமைப்பு)**

## அனைவருமே சித்திரையை வரவேற்று நிற்போம்!



சித்திரையைக் கொண்டாடச் சிறகடிக்கும் கற்பனைகள்
எத்தனையே எல்லோரின் மனத்தினிலும் இருக்கிறது
அத்தனையும் நிறைவேற ஆண்டவனை வேண்டி
அனைவருமே சித்திரையை வரவேற்று நிற்போம்

தைபிறந்த பின்னாலே சந்தோஷம் தருவதாய்
சீரான சித்திரை சிறப்பாக வந்தமையும்
ஊரெல்லாம் கொண்டாட்டம் உறவெல்லாம் கூடிடுவர்
தேரோடும் கோவில்களில் திருவிழா சிறந்துவிடும்

புத்தாடை எடுத்திடுவோம் புத்துணர்வும் பெற்றிடுவோம்
மொத்தமுள்ள உறவுகளை முகமலர்ச்சி ஆக்கிடுவோம்
கற்றாரைக் கண்டிடுவோம் கைதொட்டு வணங்கிடுவோம்
பெற்றவரின் ஆசியினைப் பெற்றுமே மகிழ்ந்திடுவோம்

இனிப்புச் சுவையோடு இங்கிதமாய் பட்சணங்கள்
காரமும் சேர்த்து களிப்பாகச் செய்திடுவோம்
கொடுத்து மகிழ்ந்திடுவோம் குதூகலத்தில் மிதந்திடுவோம்
வீடெங்கும் பட்சணங்கள் விதம் விதமாய் வீற்றிருக்கும்

வாசலிலே மாக்கோலம் மங்களமாய் வரவேற்கும்
வீடெங்கும் மகிழ்ச்சியது தென்றலாய் பரவிநிற்கும்
பூஜையறை பக்தியினை வெளிச்சமாய் காட்டிநிற்கும்
பொங்கலுடன் அம்மாவும் உள்நுழைவார் அப்பாவுடன்

மாமாவும் மாமியுடன் வந்திருப்பார் மகிழ்வுடனே
சித்திரைக்குப் புத்துடுப்பும் சீராகத் தந்திடுவார்
அவர்காலைத் தொட்டுவிட்டால் அகநிறைவார் மாமாவும்
ஆசியினை எமக்கீந்து அவரளிப்பார் பணப்பரிசும்

மாமாவின் பிள்ளைகள் மகத்தான பரிசாகும்
மலர்ச்சியுடன் ஓடிவந்து வாரியே அணைத்திடுவார்
ஊஞ்சல்கட்டி ஆடிடுவோம் ஒன்றாகப் படுத்திடுவோம்
உணர்வுடனே ஒன்றாக உட்கார்ந்து உண்டிடுவோம்

பட்டாசு மத்தாப்பு பெட்டிகளாய் வாங்கிடுவோம்
பக்கத்து வீட்டாரும் எங்களுடன் இணைந்திடுவார்
வெள்ளிக் கம்பிகளாய் மத்தாப்பு விரிந்தேயெழும்
வெடிவெடிக்கும் சத்தத்தால் தெருவே கலகலக்கும்

பட்டிமன்றமோடு பாங்கான இசை நிகழ்ச்சி
வெட்டவெளி மேடைகளில் விமரிசையாய் நடக்கும்
பாடிடுவார் ஆடிடுவார் பரவசமாய் ஆகிடுவார்
சித்திரைக் கொண்டாட்டம் முத்திரையாய் ஜொலித்துவ-
ிடும்

இத்தனையும் நடந்தது எல்லோர்க்கும் நெஞ்சிருக்கும்
காத்திருப்பு என்பது களிப்பான எதிர்பார்ப்பே
நாடுபோகும் போக்கினிலே நமக்குச் சித்திரைவாய்த்-
திடுமா
ஏக்கமுடன் இருக்கின்ற நிலையிப்போ வந்திருக்கு

துன்பங்கள் வாராமல் துணையிருப்பாய் ஆண்டவனே
இன்பங்கள் துன்பங்கள் எல்லாமே உன்கையில்
சித்திரையில் நல்வெளிச்சம் வருவதற்கு வழிசமைப்பாய்
நித்தமுமே பணிகின்றோம் நின்பாதம் அடைக்கலமே!

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,**
**மெல்பேர்ன், ஆஸ்திரேலியா .**

# சித்திரைப் புத்தாண்டு சிறப்பிதழ்



## செஞ்சொற்செல்வரின் புத்தாண்டு ஆசியுரை

இறையருளால் அனைவரும் மகிழ்வுற்று வாழ பிரார்த்திக்கிறேன். புதிய 'விசுவாவசு' வருடம் மங்களகரமாகப் பிறக்கிறது. புதுவருட நாளில் அனைவரும் திருக்கோயில்களுக்குச் சென்று வழிபாடு செய்யுங்கள். தாய், தந்தையின் பாதம் பணிந்து நல்லாசிப் பெறுங்கள். மூத்தோர்களை நாடிச்சென்று அவர்களின் அன்பையும், ஆசிகளையும் நிறைவாகப் பெறுக்கொள்ளுங்கள்.

புதிய வருடத்தில் புதிய எண்ணங்களோடு, நற்காரியங்களைச் செய்வதற்கு முன்வாருங்கள். காலம் மிகவும் பெறுமதியானது, போன நாள்கள் திரும்பிவரப் போவதில்லை. இந்த உண்மையை நாம் உணர வேண்டும். இந்தப் பிறவி எமக்குக் கிடைத்த அரிய வாய்ப்பு. இப் பிறவியில், நாம் மகிழ்ச்சியாக வாழ்ந்து, பிறரையும் மகிழ்ச்சியாக வாழ வைப்பதே எம் கடமையாகும்.

வாழ்நாளில் இதுவரை நாம் எதைச் சாதித்தோம், என்ற கேள்வி வருடங்கள் கடக்கின்ற போதெல்லாம் எம்மிடையே எழ வேண்டும். இன்று எம் சூழலில் ஒருவரையொருவர் குறைகூறுவதில் காலத்தைக் கழிக்கிறோம். குறைகளைச் சொல்வதற்கு முதல் "நாம் இதுவரை என்ன பயனுள்ள காரியங்களைச் செய்தோம்" என எண்ணுதல் வேண்டும். "உன்னை நீ திருத்திக்கொள் சமுதாயம் தானாகத் திருந்தும்" என்ற மூத்தோர் வார்த்தைகள் மிகவும் பெறுமதியானவை. ஏக காலத்துக்கும் பொருத்தமானவை.

புதிய ஆண்டு எம் மண்ணில் புதுமைகள் நடைபெற வேண்டும். நீதி தழைக்க வேண்டும். அரசியலில் உண்மையான அறம் பேண வேண்டும். இளைய தலைமுறையினரை அன்பால் ஆற்றுப்படுத்த வேண்டும். எங்கும் ஆனந்தம் பெருக வேண்டும். உலகில் நடைபெறும் போர்கள் ஒடுங்க வேண்டும். எல்லோரும் உரிமைகளோடு வாழும் மனிதப்பண்பு வலுக்க வேண்டும். உயர்ந்த எண்ணங்களோடு அனைவரும் வாழ வேண்டும். அனைவருக்கும் இதய பூர்வமான புத்தாண்டு வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் கூறி அமைகிறேன்.

கலாநிதி. ஆறு. திருமுருகன்,
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.
தலைவர், சிவபூமி அறக்கட்டளை,
இலங்கை.



# சித்திரைப் புத்தாண்டு சிறப்பிதழ்



## மகிழ்ச்சியும் செல்வமும் நிறைந்த புத்தாண்டுக்காக ஒன்றிணைவோம்

இலங்கையர்களின் சிறப்பான கலாசார விழாவான சிங்கள, தமிழ் புத்தாண்டுக்காக எமது நாட்டின் அன்பான மக்களுக்கு வாழ்த்துச் செய்தியை வெளியிடுவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

சூரியன் மீன ராசியிலிருந்து மேஷ ராசிக்குள் செல்லுவதை பாரம்பரியமாக புத்தாண்டின் பிறப்பு அல்லது சூரிய பகவானைக் கொண்டாடுவதற்கு இந்த நாட்டு மக்கள் தொன்றுதொட்டுச் செயல்பட்டு வருகின்றனர். இக்காலத்தில் மரங்கள் கனிகளால் நிறைந்து, விளைச்சல் செழித்து, களஞ்சியங்கள் நிரம்பி, அனைவரின் உள்ளங்களிலும் செழிப்பின் ஒளி பிறக்கும்.

சிங்கள தமிழ் புத்தாண்டு என்பது சரியான நேரத்தில் துல்லியமாக செயல்படுவதை பழக்கப்படுத்திய, நன்றி உணர்வை வளர்த்தெடுத்த கலாசார விழாவாகும். மேலும், இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையேயான உறுதியான தொடர்பையும், ஒருவருக்கொருவர் இடையேயான உறவுகளின் மதிப்பையும் வெளிப்படுத்தும் இவ்விழா, அனைத்து வேறுபாடுகளையும் மறந்து புதிய மனிதர்களாக முன்னேறுவதற்கான வழிகாட்டுதலை வழங்குகிறது.

இந்தப் புத்தாண்டில் வழக்கமான சவால்களுடன் புதிய சவால்களும் நம் முன் உள்ளன. அவற்றைச் சரியாக நிர்வகித்து நாட்டை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்வது நம் அனைவரதும் கூட்டுப் பொறுப்பாகும். அத்தகைய சூழ்நிலைகளில் குறுகிய கருத்தியல்களில் ஒட்டிக்கொண்டிருப்பது தவிர்க்கப்பட வேண்டும் என நாங்கள் நம்புகிறோம்.

எனவே, இதன் உண்மையான பொருளை புரிந்துகொண்டு, கூட்டு முயற்சியின் மூலம் நமக்கு எதிரான சவால்களை வென்று அமைதி, மகிழ்ச்சி, செழிப்பு நிறைந்த புத்தாண்டுக்காக நாம் அனைவரும் செயல்பட வேண்டும்.

ஒரு நாடாக நாம் எதிர்கொள்ளும் சவால்களை அனைவரும் ஒன்றிணைந்து வெற்றிகரமாக எதிர்கொண்டு, அந்தச் சவால்களை வென்று அனைவரையும் உள்ளடக்கிய செழிப்பை நோக்கிய இந்த பயணத்தில், அனைவரின் உள்ளங்களிலும் துக்கம், கண்ணீர், வலி இல்லாமல் மகிழ்ச்சியும் செல்வமும் நிறைந்த புத்தாண்டிற்காக ஒன்றிணையுமாறு உலகெங்கிலும் உள்ள இலங்கையர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

உங்கள் அனைவருக்கும் அமைதி, மகிழ்ச்சி, செழிப்பு நிறைந்த இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!

**சஜித் பிரேமதாஸ,**
**எதிர்க்கட்சித் தலைவர்,**
**இலங்கை நாடாளுமன்றம்.**



# சித்திரைப் புத்தாண்டு சிறப்பிதழ்

## எமது இருப்பைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும்!



பிறக்கும் சித்திரைப் புத்தாண்டு நமது பலம், ஒற்றுமை என்பவற்றை நிலை நிறுத்தி எழுச்சி கொள்ளும் சமூகமாய் இன்புற்று வாழ்வதற்கு வழி சமைக்கட்டும்.

பிறக்கும் சித்திரைப் புத்தாண்டில் இலங்கை வாழ் சமூகத்தினருக்கு வளமான வாழ்வும் குறைவற்ற செல்வமும், கிடைத்திட வேண்டும். சித்திரைப் பிறப்பு சகல வகையிலும் வசந்தத்தை உருவாக்கக் கூடியது.

இன,மத, மொழி, சாதி, சமய வேறுபாடுகளைக் கலைந்து எல்லோரும் ஒரு தாய் மக்களென உலகறியச் செய்யும் சிறப்பு நாளாகும். இந்தச் சித்திரைப் புத்தாண்டில் மனிதம் நிரந்தரமாய் நிலைத்து புதிய சாதனைகளையும், வெற்றிகளையும் பெற்று வழிமறிக்கும் தடைகளைத் தகர்த்து மகிழ்ச்சி பொங்கும் நன்நாளாக அமைய இறைவனை பிராருத்திப்போம்.

கடந்த வருடம் எமது மக்கள் எத்தனை துன்பங்களை அனுபவித்திருந்தாலும் இனிவரும் காலங்கள் நலமாக அமையும் என்ற திடமான நம்பிக்கை மாத்திரமே எமது மக்களுக்கு நிரந்தரமான மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது.

தாங்கள் என்னதான் புறக்கணிக்கப்பட்டாலும் ஒதுக்கப்பட்டாலும் கூட தமது தெய்வ நம்பிக்கை, விருந்தோம்பல், தொழில் கடமைகள், இவை எதிலுமே எமது மக்கள் பின்னின்றதில்லை. நாம் எமது இருப்பைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும். அதற்கு நாங்கள் தொலைநோக்கு சிந்தனையோடு செயற்பட வேண்டும்.

எனவே எல்லாம் வல்ல இறைவன் எமது மக்களுக்கு வழங்கியுள்ள திடமான மனநிலையும் கிடைத்ததை மகிழ்வுடன் ஏற்றுக் கொள்ளும் பண்பும் எமக்கு தொடர்ந்தும் நிலைக்க வேண்டும். எதிர் வரும் காலங்களை நாமே சிறப்பாக்கிக் கொள்ளும் மன உறுதியை எமது சமூகம் பெற வேண்டும்.

**மருதபாண்டி ராமேஸ்வரன்,**
**முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்,**
**நுவரெலியா மாவட்டம்.**
**தவிசாளர்,**
**இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்.**

## சமூகங்களை ஒன்றிணைக்கும் பிணைப்பை வலுப்படுத்துவோம்



தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டைக் கொண்டாடும் இந்த வேளையில், வடக்கு மாகாண மக்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பாரம்பரிய சித்திரைப் புத்தாண்டு புதுப்பித்தல், ஒற்றுமை மற்றும் நம்பிக்கைக்கான வாய்ப்பையும் குறிக்கின்றது. இந்தப் பண்டிகைக் காலம் ஒவ்வொரு வீட்டுக்கும் அமைதி, செழிப்பு, நல்ல ஆரோக்கியம் மற்றும் மகிழ்ச்சியைக் கொண்டுவருவதாக அமையட்டும்.

ஒற்றுமை, கலாசார நல்லிணக்கம் மற்றும் பரஸ்பர மரியாதை ஆகியவற்றின் உணர்வோடு இந்தப் பண்டிகையை ஏற்றுக்கொள்வோம். இந்தப் பண்டிகை நாளில், எமது வளமான கலாசார பாரம்பரியத்தைக் கொண்டாடுவோம். சமூகங்களை ஒன்றிணைக்கும் பிணைப்புகளை வலுப்படுத்துவோம்.

கடந்த காலங்களில் பின்னடைவைச் சந்திருந்த எமது நாடும், மாகாணமும் மீண்டெழுந்து வரும் இந்தத் தருணத்தில் புதிய உற்சாகத்துடன் பண்டிகையைக் கொண்டாடும் நாம், எதிர்காலத்தில் சிறப்பான இலக்கை அடைவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

அனைவருக்கும் இனிய சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

**நா.வேதநாயகன்**
**ஆளுநர், வடக்கு மாகாணம்.**

# இன்றைய ராசி பலன்கள் - 14.04.2025



## மேஷம்

தியானம் அல்லது பிரார்த்தனை மேற்கொள்வதன் மூலம் இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கக் கொள்ளலாம். இன்று வெற்றி பெறுவதற்கான உறுதி உங்களிடம் காணப்படும் முக்கிய முடிவுகள் எடுக்க இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளலாம்.

உங்கள் பணிக்கான பாராட்டு கிடைக்கும். இது உங்கள் மனதில் மகிழ்ச்சியை அதிகரிக்க உதவும்.

உங்கள் துணையிடம் நேர்மையான அன்பை வெளிப்படுத்துவீர்கள்.இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருக்கும். உங்கள் சொத்துக்கள் அதிகரிக்கும். முக்கிய முதலீடுகளில் இன்று பணத்தை சேமிக்கலாம்.



## ரிஷபம்

இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்கும். தைரியம் மற்றும் உறுதி வெற்றிக்கு வழி வகுக்கும்.

இன்று பணியிடத்தில் வளர்ச்சி காணப்படும். நீங்கள் விரைவாகவும் எளிதாகவும் பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை கொண்டாடுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று நிதிநிலைமையில் முன்னேற்றம் காணப்படும். உங்கள் சேமிப்பு உயரும்.

நீங்கள் இன்று ஆற்றலுடனும் ஆரோக்கியத்துடனும் காணப்படுவீர்கள். இன்றைய நாளை நன்கு பயன்படுத்திக்கொள்ளுங்கள்.



## மிதுனம்

இன்று பதற்றமும் கவலையும் காணப்படும். உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி செயலாற்றுவது சிறந்தது.

இன்று பணிகள் அதிகமாக காணப்படலாம். சிறப்பாக திட்டமிட்டு மிகச் சரியாக பணிகளை ஆற்ற வேண்டும்.

உங்களின் சில கருத்துக்களை உங்கள் துணையுடன் பகிர்ந்து கொள்ள இன்றைய நாள் உகந்ததல்ல. உரையாடும் போது கவனம் தேவை.

பங்கு வர்த்தகம் மூலம் பணம் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. என்றாலும் அதிகமாக சேமிக்க இயலாது.

செரிமானம் சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படும். அதிக நீரைப் பருகவும்.



## கடகம்

இன்று இழப்புகள்நேரா வண்ணம் கவனித்து செயலாற்ற வேண்டும். பொறுமையாக இருக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

உங்களின் சில பணிகள் முடிக்க முடியாமல் நிலுவையில் இறக்கும். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் துல்லியமாக முடிக்க திட்டமிட வேண்டியது அவசியம்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்பட்டு வன்மையாக நடந்து கொள்வீர்கள். உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்க அதனை தவிர்த்தல் நல்லது.

இன்று அதிக பொறுப்புகள் காரணமாக பணம் அதிக அளவில் செலவாகும். தேவையற்ற செலவுகளை கண்காணிக்க வேண்டும்.

வயிறு உப்பசம் காரணமாக சில பிரச்சினைகள் ஏற்படும்.



## சிம்மம்

இன்று ஓய்வில்லாமல் உழைப்பீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இன்று பயனுள்ள முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

பணி நிமித்தமான பயணம் காணப்படும். இது உங்களுக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்கித் தரும்.

வெளியிடங்களுக்கு சென்று இருவரும் இணைந்து மகிழ்ச்சியுடன் இன்றைய நாளை கழிப்பீர்கள். இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் எதிர்காலத்துக்காக பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இதனை பயன்படுத்திக் கொள்ளுங்கள்



## கன்னி

இன்று சம்பவங்கள் உங்களுக்கு சாதகமாக அமைய உங்கள் செயல்களை திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். முக்கியமான முடிவுகளை வேறு நாளைக்கு தள்ளி வைக்க வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக இருக்கும் காரணத்தால் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. இன்று மிகுந்த எச்சரிக்கையும் சிறந்த திட்டமிடலும் தேவை.

இன்று அமைதியாக இருக்க வேண்டும். உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள்வதை தவிர்க்க வேண்டும். உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொண்டால் மகிழ்ச்சி நிலவும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். எனவே தேவையற்ற செலவுகளை குறைத்துக் கொள்வது அவசியம்.



## துலாம்

இன்று சில ஏமாற்றங்களை சந்திக்க நேரலாம். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். அடுத்தவர் தரும் வாக்குறுதியை நம்பாமல் உங்கள் கடின உழைப்பை நம்பி செயலாற்றினால் வெற்றி நிச்சயம்.

பணியிடச் சூழல் இன்று மகிழ்சிகரமாக இருக்காது. உங்கள் சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்காது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள். இதனால் உறவில் அமைதியின்மை காணப்படும்.

இன்று சில பண வரவுகள் காணப்பட்டாலும் செலவுகளை சமாளிப்பது கடினமாக இருக்கும். உங்கள் பணத்தை சிறந்த முறையில் செலவு செய்யவும்.

உடல் உழைப்பு காரணமாக கால்களில் வலி ஏற்படலாம். முறையான உடற்பயிற்சியும் தியானமும் சிறந்தது.



## விருச்சிகம்

ஆன்மீக ஈடுபாடு நல்ல பலன்களை அளிக்கும். பிரார்த்தனை மற்றும் இறை வழிபாடு மேற்கொள்வது சிறந்தது.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. பணிகளில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. எனவே கவனமாகப் பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் மோதல் காணப்படும். உரையாடும் போது கவனம் தேவை.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. இன்று கூடுதல் செலவுகளை சந்திக்க நேரும்.

பரபரப்பான பணிகள் காரணமாக தலைவலி அல்லது கால் வலி ஏற்படலாம். யோகா மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 14.04.2025




இன்று உறுதியாக நற்பலனகள் கிடைக்கும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறக் காண்பீர்கள்.

உங்கள் பணியில் வளர்ச்சியைக் காண்பீர்கள். சக பணியாளர்கள் ஆதரவாக இருப்பார்கள்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கமும் புரிந்துணர்வும் ஏற்படும்.

பூர்வீகச் சொத்து வகையில் இன்று வரவு காணப்படும். உங்கள் சேமிப்பு உயரும்.

இன்று ஆற்றலுடனும் ஆரோக்கியத்துடனும் காணப்படுவீர்கள்.




உங்கள் செயல்களை மேற்கொள்வதில் தடைகள் காணப்படும் ஒரு முடிவை செயலாக்குவதற்கு முன் ஒன்றிற்குஇரண்டு முறை யோசிக்க வேண்டும். தகவல் பரிமாற்றத்தில் குறைபாடு காணப்படும்.

சக பணியாளர்களுடன் சூடான விவாதங்கள் அல்லது அகந்தை உணர்வுகள் தலை தூக்கும். அத்தகைய சூழ்நிலையை நீங்கள் உருவாக்காமல் இருப்பது சிறந்தது.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

நிதிநிலைமை சாதகமாக இருக்காது. தேவையற்ற செலவுகளால் கவலை ஏற்படும்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. கண்களில் கவனம் செலுத்துவது சிறந்தது.




இன்று தடைகளையும் கஷ்டங்களையும் சமாளிக்க வேண்டியிருக்கும். நீங்கள் முயற்சி எடுத்தால் இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக வெற்றியை அளிக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.

உங்களின் அகந்தைப் போக்கு காரணம்மாக உறவில் நல்லிணக்கம் குறைந்து காணப்படும். உங்கள் துணையின் உணர்வுகளை கருத்தில் கொண்டு மதிப்பது நல்லது.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. கவனம் தேவை.

தேவையற்ற எண்ணங்கள் காரணமாக குழப்பம் மட்டுமன்றி தலைவலியும் ஏற்படும்.




உங்கள் மனதில் காணப்படும் குழப்பம் காரணமாக பாதுகாப்பற்ற உணர்வு ஏற்படும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். உங்கள் பணிகளை திறமையாக ஆற்ற நீங்கள் திட்டமிட வேண்டும்.

குறைவான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.இருவரும் மனம் திறந்து பேசிக்கொள்வது சிறந்தது.

நிதிநிலைமை அவ்வளவு சிறப்பாக இருக்காது. இன்று கூடுதல் செலவுகள் காணப்படும்.

குழந்தைகளின் ஆரோக்கியம் பற்றிய கவலை காணப்படும் அவர்களின் ஆரோக்கியத்துக்காக பணம் செலவு செய்ய நேரும்.

# நல்லூர் வடக்கு சந்திரசேகர பிள்ளையார் ஆலய கைலாய வாகனம்



நல்லூர் வடக்கு ஸ்ரீசந்திரசேகரப் பிள்ளையார் ஆலய மகோற்சவத்தில் வெள்ளிக்கிழமை கைலாய வாகனத் திருவிழா நடைபெற்றது.

(படங்கள்-ஐ.சிவசாந்தன்)



